# கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (க.பா.ந.ஆ) பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான தேசிய செயல் நடவடிக்கைத் திட்டம்

கருப்பொருளுக்கான விடயம்: சர்வதேச மனிதாபிமானச் சட்ட விடயங்கள்

ஜுலை 26, 2012, வியாழக் கிழமை – 8.20 கிறீன்விச் நேரம்

| பரிந்துரை | நடவடிக்கை | பிரதான பொறுப்புடைய அலுவலகம் | முக்கிய நிறைவேற்றுகைக் குறிக்காட்டி (KPI) | கால வரையறை |
|---|---|---|---|---|
| **9.9, 9.37அ.** – எத்தகைய குறித்த சந்தர்ப்பங்களின் கீழ் பொதுமக்களுக்கு இறப்பு அல்லது காயத்திற்கான சம்பவங்கள் நிகழ்ந் திருக்கலாம் என்பதை மேலும் முழுமையாக விசாரணை செய்து அறிவதுடன், அத்தகைய புலன் விசாரணைகள் தவறான நடத்தையை வெளிப்படுத்துமாயின், தவறிழைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கையை மேற்கொண்டு தண்டித்தல். | **1.** ஆயுதப்படைகளின் நியதிச்சட்ட முறைப்படி மேற்கொள்ளப்பட்டு வரும் ஒழுக்காற்றுச் செயன் முறைகளை பூர்த்தி செய்தல்.<br>2. செயன்முறைகள் முடிவடைந்ததும், பொருத்தமானவிடத்து, சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு பிற்தொடர்ச்சியான நடவடிக்கையை எடுத்தல்.<br>**3.** முறைப்பாடொன்றை ஸ்தாபிப்பதற்கான குற்றவியல் நடவடிக்கைக் கோவையில் அளிக்கப் பட்டுள்ள இருக்கின்ற முறைமையை உபயோகப்படுத்துவதுடன் அத்தகைய பொறிமுறைக்கு போதுமான விளம்ரப்படுத்தலை அளித்தல். | 1) பாதுகாப்பு அமைச்சு<br>2) பாதுகாப்பு அமைச்சு<br>3) நீதி அமைச்சு<br>4) சட்ட மா அதிபர் திணைக்களம் | 1) ஒழுக்காற்று விசாரணைகள் பூர்த்தி செய்யப்படுதல்<br>2) குற்றமிழைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்<br>3) நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படல் | 1) 12 மாதங்கள்<br>2) 24 மாதங்கள்<br>3) 24 மாதங்கள் |
| **9.23** – சரணடைதல்/கைது என்பவற்றின் பின்னர் காணாமற்போதலில் முழுமையான ஒரு புலன் விசாரணையை ஆரம்பித்தல் மற்றும் அத்தகைய புலன்விசாரணைகள் இராணுவத்தின் தனிப்பட்ட உறுப்பினர்கள் தரப்பிலான ஏதேனும் சட்ட விரோத செயல்களுக்கான சான்றுகளைத் தோற்று விக்குமாயின், தவறிழைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தண்டனை அளித்தல். | மேற்கூறிய 1) , 2) மற்றும் 3) | மேற்கூறிய 1) , 2) மற்றும் 3) | -மேலுள்ளவாறு - | -மேல் உள்ளவாறு - |
| **9.37ஆ** –மோதல் காலத்தின் போது பொதுமக்களுக்கு இறப்பு மற்றும் காயங்கள், | மதிப்பாய்வை நடாத்துதல். | குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் | மதிப்பாய்வை நடாத்துவதற்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| அதே போன்று சொத்துக்களுக்கான சேதம் என்பவற்றின் அளவு மற்றும் அவை ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றிய முதன்மைத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களை உள்ளடக்கும் வகையில் தொழில்சார் ரீதியாக வடிவமைக்கப்பட்ட ஒரு குடித்தன மதிப்பாய்வை நடாத்துதல். | | திணைக்களம்.<br><br>(ஜனாதிபதிச் செயலகம் இதனை மேற்பார்வையிடும்) | ஆரம்பிக்கப்பட்ட பொறிமுறை | நடைபெற்று வருகின்றது |
| **9.39** – சனல் 4 காணொளியின் உண்மைத் தன்மையை அல்லது காணொளிக் காட்சிகளில் இருந்து எழுகின்ற குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதல் குறித்து ஓர் சுயாதீனமான புலன் விசாரணையை ஆரம்பித்தல். | **1.** சனல் 4 இல் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களின் உண்மைத் தன்மை குறித்து ஆராய்வதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் செயன் முறையை, அதாவது இராணுவத்தால் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணையை மதிப்பீடு செய்தல்.<br><br>**2.** அத்தகைய பெறுபேறுகளின் அடிப்படையில், பொருத்தமான பிற்தொடர்ச்சி நடவடிக்கைகளை எடுத்தல். | பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி செயலகம் | 1. மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br>2. பிற்தொடர்ச்சி நடவடிக்கை இனங் காணப்பட்டு, பொருத்தமானவாறு மேற்கொள்ளபட்டது. | 06 மாதங்கள் |

## கருப்பொருளுக்கான விடயம்: மனித உரிமைகள்

| பரிந்துரை | நடவடிக்கை | பிரதான பொறுப்புடைய அலுவலகம் | முக்கிய நிறைவேற்றுகைக் குறிக்காட்டி (KPI) | கால வரையறை |
|---|---|---|---|---|
| **9.48** –சட்டத்தை நேரடியாக அமுல்படுத்தும் அதிகாரங்கள் குற்றச்சாட்டுக்கள் [ஆட் கடத்தல்கள், பலவந்தமான அல்லது தன்னிச்சையாக இல்லாத காணாமற் போதல்கள், மற்றும் எதேச்சாதிகாரமான தடுத்து வைத்தல்கள் ] முறையாகப் புலன்விசாரணை செய்யப்பட்டு மற்றும் குற்றமிழைத்தவர்கள் நீதியின் முன் கொண்டு வரப்படுவதை உறுதிசெய்வதற்கு உடனடியான நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல். | 1. சட்டத்தை அமுல்படுத்துவதற்கு, தடைகள் ஏதுமிருப்பின், அவற்றை இனங் காணுதல். குற்றங்கள் கடுமையான தண்டித்தல்களுடன் அணுகப்படுதல்.<br>2. பொலிசாரின் புலன்விசாரணைத் திறன்களை வலுப்படுத்துதல்.<br>3. நீதிக்கான வழிவகைகளை வலுப்படுத்துதல்.<br>4. உள்ளூர்ச் சமூகத்துடனான ஒத்துழைப்பு மற்றும் சமூகமயப் படுத்தப்பட்ட பொலிஸை ஸ்தாபித்தல் என்பவை மூலம் மேலும் பயனுறுதியான கண்காணிப்புப் பொறிமுறையை .இடுவதற்கு பொலிஸ் துறையின் செயற்றிறனை அதிகரித்தல். | பாதுகாப்பு அமைச்சு/பொலிஸ் திணைக்களம்<br><br>சட்ட உதவி ஆணைக்குழு, சமூக மட்டத்திலான ஸ்தாபனங்கள், நீதி அமைச்சு, பொலிஸ் திணைக்களம் | 1) தடைகள் இனங் காணப்பட்டு சீர்ப்படுத்துதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.<br>2) பொலிஸ் பயிற்சி அலகுகளில் திறன்களை வலுப்புடுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் ஒருங்கிணைக்கப் படுதல்.<br>3) சமூகமயப்படுத்தப்பட்ட பொலிஸ் பிரிவுகளை ஸ்தாபிப்பதன் மூலம் நீதித் திட்டங்களுக்கான வழிவகைகள் இனங்காணப்பட்டும் மற்றும் அமுல்படுத்தப்படுதல். | 6 மாதங்கள்<br><br>12 மாதங்கள்<br><br>12 மாதங்கள் |
| 9.51 –காணாமற் போதல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை புலன்விசாரிப்பதற்கு ஒரு விசேட புலன்விசாரணை ஆணையாளரை நியமித்து பொருத்தமான வகையில் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சட்ட மா அதிபருக்கு சான்றுகளை வழங்குதல். தகவல்களைத் திரட்டுவதற்கும் மற்றும் செயன்முறைப் | 1. குற்றவியல் நடைமுறைக் கோவையில் உள்ளவாறு அத்தகைய முறைப்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்து தற்போதுள்ள நடைமுறைகளை ஊக்கவித்தல்.<br>2. அரசாங்கத் தகவல் மையம் (GIC) | பொலிஸ், சட்ட மா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு, தகவல் தொடர்பாடல் தொழிலநுட்ப முகவர் நிலையம் ( ICTA). | தற்போதுள்ள வசதிகளை பொதுமக்களுக்கு அறியத் தருவதற்கு ஊடகங்கள் மூலமாக பொருத்தமான பொறிமுறைகளை ஈடுபடுத்துதல். | 3 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| படுத்துவதற்கும் அனுவபம் வாய்ந்த புலன் விசாரணையாளர்களை ஆணையாளர் அலுவலகத்துக்கு அளித்தல். | (1919) ஊடாக இருக்கின்ற பல்வேறு பொறிமுறைகள் தொடர்பாக பொதுமக்களை உணர்வுபடுத்துதல்.<br><br>3. தகவல்களைப் பெற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதற்கு தற்போதைய அரசாங்கத் தகவல் மையத்தின்(1919) செயற்றிறனை அதிகரித்தல். | | | |
| **9.51 –** காணாமற் போன ஆட்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஒருங்கிணைக்கின்ற வகையில், தேசிய மட்டத்தில் ஒரு மையப்படுத்திய தரவுகளைச் சேகரிக்கும் முறைமையை வடிவமைத்தல். | காணாமற் போன ஆட்கள் தொடர்பான தகவல்களை ஒழங்கபடுத்துவதற்காக ஒருங்கிணைந்த தரவுத் தளமொன்றை ஸ்தாபித்தல்.<br><br>(மேலுள்ள பந்தி 9.37ஆ தொடர்பான நடவடிக்கையுடன் ஒன்றுபடுத்தவும்) | குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.<br><br>பாதுகாப்பு அமைச்சு | தரவுத் தளம் ஸ்தாபிக்கப்பட்டு தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | 6 மாதங்கள் |
| **9.52 –** நிர்வாக மட்டத்தில் [இறப்புகள் பதிவுச் சட்டம்] அமுல்படுத்தலுக்கான அனைத்து அவசியமான முறைமைகளையும் எடுத்தல்.<br><br>விசேடமாக மோதலில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஊடகங்கள், கிராம சேவகர்கள் ஊடாக சட்டத்தின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கு போதுமான விளம்பரப்படுத்துதலை அளித்தல். | **1.** ஏற்கனவே விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் இறப்புகள் பதிவுச் சட்ட அமுல்படுத்துதலின் முன்னேற்றத்தை மீள்பரிசீலித்தல்.<br><br>**2.** மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு, அரசாங்கத்தின் 1919 தகவல் தொழில்நுட்ப வசதியினூடாக தகவல்களின் கிடைக்கப் பெறும் தன்மைக்கு போதுமான விளம்பரப்படுத்தலை அளித்தல். | அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | புதிய சட்டத்தின் ஏற்பாடுகளின் அமுல்படுத்தலுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நடைபெற்று வருகின்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| **9.57 –** பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் அல்லது பயங்கரவாத தடைச் சட்டம் என்பவற்றின் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் கீழ் கட்டுக்காவலில் எடுக்கப்பட்ட நபர்களது தடுத்து வைத்தல் மற்றும் கைது என்பவற்றைக் கண்காணிப்பதற்கு ஒரு சுயாதீன ஆலோசனைக் குழுவை நியமித்தல். | பரிந்துரைகள் 9.9, 9.37 (அ) (ஆ), 9.23, 9.39 என்பவற்றின் கீழான நடவடிக்கைகளைப் பார்க்கவும். | அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | | |
| நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப் பட்டிருப்பர்களின் விடயங்களை (குற்றச் சாட்டுக்கள் இன்றி நீண்ட காலமாக) ஒவ்வொன்றாக சம்பவங்களின் அடிப் படையில் ஆராய்வதற்கான ஒரு விசேட பொறிமுறையை உருவாக்குதல் மற்றும் ஒவ்வொரு விடயத்தையும் முடித்து வைத்தல் தொடர்பாக ஒரு நடைமுறையைப் பரிந்துரைத்தல். | 1. பிரச்சினை மீது கவனம் செலுத்துவதற்கு தற்போதுள்ள முறைமையில் வழிமுறைகளை இனங்கண்டு ஸ்தாபித்தல்.<br><br>2. சட்ட மா அதிபர் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடயங்களை ஆராய்வதற்கு ஆணைப்படுத்தப்பட்ட ஒரு தனியான அலகு மூலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளுதலை பூர்த்தி செய்தல். | சட்ட மா அதிபர் திணைக்களம் | 1) செயன்முறைகள் இனங் காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.<br><br>2) தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களின் என்ணிக்கையிலான வீழ்ச்சி. | 24 மாதங்கள் |
| தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடயங்களை ஆராய்யும் செயன் முறைகளுக்கு உதவியாக சட்ட மா அதிபர் திணைக்களத்தில் ஒரு கவன ஈர்ப்பு மையத்தை ஸ்தாபித்தல். | -மேலே குறிப்பிட்டவாறு - | சட்ட மா அதிபர் திணைக்களம். | அலகு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது | 24 மாதங்கள் |
| **9.59 –** குறிப்பாக கட்டாயப்படுத்திய அல்லது தன்னிச்சையில்லாத காணாமற்போதல்களை குற்றப்படுத்துவதற்கு உள்நாட்டு சட்ட வாக்கத்தை உருவாக்குதல். | 1) சட்டவாக்கத்துக்கான தேவையை ஆராய்தல்<br><br>2) சட்டச் சீர்திருத்தம் அவசியமானதாகக் காணப்படுமிடத்து, ஓர் அச்சுறுத்தும் | நீதி அமைச்சு<br><br>சட்ட மா அதிபர் திணைக்களம்.<br><br>பொலிஸ் திணைக்களம் | 1) சட்ட மறுபரிசீலணை பூர்த்தி செய்யப் பட்டுள்ளது.<br><br>2) அவசியமாகக் காணப்படுமிடத்து, சட்டவாக்கம் | 24 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்பாடாக கடுமையான சிறைத் தண்டனை விதித்தலின் தேவையின் வலியுறுத்தலுடன் சட்டத்தை உருவாக்கிப் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல். | | வரையப்பட்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். | |
| 9.60 – பாடசாலைச் சிறுவர்கள், இளைஞர்கள், பாதுகாப்பு படை உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் போன்றவர்களை இலக்காகக் கொண்டு நாடு முழுவதிலுமாக விரிவான மனித உரிமைகள் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல். | 1) தேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டத்தில் (NHRAP) இனங் காணப்பட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.<br><br>2) இரண்டாம் நிலைக் கல்விப் பாடவிதானத்தில் உள்ளடக்குவதற்கான ஒரு அலகை உருவாக்குதல். | 1) தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு(NHRC), கல்வி அமைச்சு, ஆயுதப் படைகள், பொலிஸ் மா அதிபர்<br><br>2) தேசிய கல்வி நிறுவனம்(NIE) | 1) தேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டத்தில் கண்காணிக்கப் பட்டவற்றின் அமுல்படுத்துல்<br>2) அலகு உருவாக்கப்பட்டு பாடவிதானத்தில் உள்ளிணைக்கப் படுதல். | தே.ம.உ.ந.தி (NHRAP ) இற்கமைய ஒரு கால வரையறையால் கட்டுப்படுத்தப்படுதல். |
| **9.63** - தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களை உள்ளடக்கிய ஒரு விரிவான மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தை உருவாக்குவதுடன், தடுத்து வைத்திருக்கப் படும் இடம் மற்றும் மாற்றப்படும் இடங்கள் என்பவற்றின் பதிவுகளோடு, அவற்றை தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு கிடைக்கும்படி செய்தல். | நெருங்கிய உறவினர்களுக்கு தகவல்கள் இலகுவாகக் கிடைக்கும் வகையில் தற்போதைய தரவுத்தளத்தை மேம்படுத்துதல். | பாதுகாப்பு அமைச்சு | மேம்படுத்தப்பட்ட தரவுத்தளம் | 6 மாதங்கள் |
| **(1)** தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள் கொண்ட ஒரு பட்டியலை வெளியிடுதல்.<br><br>**(2)**நபரொருவரை விடுவிக்கும் பொழுது, அந்நபருக்கு எதிராக ஏதேனும் புதிய சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டாலன்றி, அதே நபர் திரும்பவும் கட்டுக்காவலில் | **1.** தடுத்து வைத்திருக்கப் பட்டுள்ளவர்கள் இருக்கின்ற இடம் குறித்து நெருங்கிய உறவினர்களுக்கு அறியத் தருகின்ற தற்போதைய நடைமுறையைத் தொடருதல். (குறிப்பு: தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அறியத் | பொலிஸ் திணைக்களம்<br><br>சட்ட மா அதிபர் | நெருங்கிய உறவினர்களுக்கு பெயர்கள் மற்றும் தொடர்புபட்ட தகவல்கள் அடங்கிய விரிவானதொரு பட்டியல் கிடைக்கப் பெறும் தன்மை. | நடைபெற்று வருகின்றது<br><br>2012 இன் இறுதியில் |

| | | | | |
|---|---|---|---|---|
| எடுக்கப்படாதிருப்பதற்கு அத்தாட்சிப் பத்திரமொன்றை வழங்குதல்.<br><br>**(3)** வழக்குத் தொடர்தல்களை துரிதப்படுத்த அல்லது தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்கு இயலும் வகையில் சட்டத்திலுள்ள பொதுவான தாமதங்களை ஆராய்தல். | தரப்படுப்படும்)<br><br>**2.** அத்தகையதொரு நடைமுறையின் செயல்முறைப் பிரயோகம் மற்றும் அதன் சாத்தியத்தன்மை என்பவை மீது ஆராய்ந்து அறிக்கைப் படுத்துதல்.<br><br>**3**.(அ) பொருத்தமான சம்பவங்களில் சந்தேகத்திற்குரியவர்களை குற்றவியல் செயன்முறையிலிருந்து தன்னிச்சையான புனர்வாழ்வுக்கு திசை மாற்றுவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல்;<br><br>(ஆ) வேலைப்பளுவை இலகுபடுத்தும் முகமாக குற்றப்பத்திரிகைகளை கூடுதல் எண்ணிக்கையிலான நீதி மன்றங்களில் தாக்கல் செய்வதற்கு இயலச் செய்தல். | திணைக்களம்.<br><br>சட்ட மா அதிபர் திணைக்களம் + பொலிஸ் திணைக்களம்.<br><br>நீதி அமைச்சு | அறிக்கை பிரசுரிக்கப்பட்டுள்ளது. | 2012 இன் இறுதியில்<br><br>2012 இன் இறுதியில் |
| **9.68,69 –** தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களைப் பரிசீலித்து இள வயதுடைய மற்றும் விசேட நிலைமை கொண்டவர்களுக்கு [இளம் பிள்ளைகளை உடையவர்கள், உடல் ரீதியாக ஊனமுற்றவர்கள், காயங்கள் மற்றும் மருத்துவ இடையீடுகளிலிருந்து குணம் அடைபவர்கள், உளவளத்துணை தேவை கொண்டவர்கள்] விசேட கவனத்தை அளித்தல். | சில குழுக்கள் அல்லது தனிப் பட்டவர்களுக்கு விசேட கவனம் தேவையா என்பதை மதிப்பீடு செய்யும் ஒரு நோக்குடன் எஞ்சிய தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்களின் நிலைமைகளை மீள்பரிசீலித்தல். | புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் | தேவைப்படும் நிலை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | 3 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| **9.73 –** சட்ட விரோத ஆயுதக் குழுக்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முறையான புலன் விசாரணைகளை நடாத்துதல். குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல். | மோதல் காலத்தின் போது, சட்ட விரோத ஆயுதக்குழுக்கள் மோதல் பின்னணியில் செயற்பட்டமை தெரிந்ததே. இந்த நடவடிக்கையை முற்றிலுமாக இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் மீண்டும் தலைதூக்காதிருப்பதை உறுதி செய்வதற்கு இந்த நடவடிக்கைகள் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படுதல் வேண்டும். | பாதுகாப்பு அமைச்சு | சட்டமும் ஒழுங்கின் பயனுறுதியான பேணுதல். | |
| **3.** சட்டமும் ஒழுங்கைப் பேணுதலில், குறிப்பாக எந்த சட்ட விரோதக் குழுக் களையும் நிராயுதப்படுத்துவதை உறுதிப் படுத்துவதற்கான குறித்த நடவடிக்கைகள். | 1) முக்கியமான பிரச்சினைகளை இனங் காண்பதற்கு குற்றப் புள்ளிவிபரங்கள் மற்றும் போக்குகள் என்பவற்றை ஆராய்தல்;<br><br>2) சட்டத்தின் அமுல்படுத்தலை மேம்படுத்துவதற்கு அவசியமான நடைமுறைகளை மேற்கொள்ளுதல். | பாதுகாப்பு அமைச்சு<br><br>பொலிஸ் திணைக்களம் | 1) பயனுறுதியான விழிப்புநிலை<br><br>2) குற்றச் சம்பவங்களிலான வீழ்ச்சி | 1) நடைபெற்று வருகின்றது<br><br>2) நடைபெற்று வருகின்றது |
| **9.78, 9.82 –** தாமதமின்றி சட்ட நடவடிக்கையை முன்னெடுக்கும் அல்லது புனர்வாழ்வளிக்கும் மற்றும்/அல்லது அவர்களை விடுதலை செய்யும் நோக்கில இள வயது கொண்ட த.வி.பு சந்தேக நபர்கள் தொடர்பான சம்பவங்களை ஒவ்வொன்றாக ஆராய்தல். புனர்வாழ்வு நிகழ்ச்சி நிறைவடைந்ததும், சிறுவர்கள் உடனடியாகவே அவர்களது குடும்பங் களுடன் வாழ்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்களது | மேலே உள்ள பந்தி 1 ஐப் பார்க்கவும்.<br><br>இந்தக் கரிசனையானது அவர்களது குடும்பத்துடனான மீளிணைதலைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையிலானோர்கள் கல்வி நடவடிக்கைகளைப் பின்தொடர்வதன் மூலம் முழுமையாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தச் செயன்முறையானது புனர்வாழ்வு | புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம். | மீளொருங்கிணைதலுக்கான நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. | நடைபெற்று வருகின்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| கல்வியைத் தொடர்வதற்கு அல்லது ஓர் வருமானத்தை ஈட்டுவதற்கு உதவியளிக்கப் படுதல் வேண்டும். | ஆணையாளர் நாயகத்தினால் தொடரப்படுதல் வேண்டும். | | | |
| **9.79** – போராளிகளாக சிறுவர்களை கட்டாய ஆட்சேர்த்தமைக்கான முதனிலையான சான்றுகள் உள்ளனவா என சம்பவங்களை புலன்விசாரணை செய்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டு வருவதை உறுதி செய்தல். | புலன்விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன. | | | |
| **9.81** – பிள்ளைகளைத் தேடிக் கண்டு பிடிக்கும் ஒரு விரிவான திட்டத்தை உருவாக்கி அமுல்படுத்துவதற்கு, அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு தேசிய பல ஒழுங்குமுறை சார்ந்த செயலணிக்குழுவை ஸ்தாபித்தல். | சிறுவர் ஆட்சேர்க்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டு, புனர்வாழ்வளிக்கப்பட்டு, சமூகத்தில் மீளிணைக்கப்பட்டுள்ளனர். | | | |
| **9.92** – பெண்கள், சிறுவர்கள், வயது முதிர்ந்தோர் மற்றும் மோதல்களினால் பாதிக்கப்பட்ட ஊனமற்றவர்கள் போன்ற நலிவடைந்த குழுக்கள் ஆகியோர்களின் தேவைகளை விரிவான முறையில் கவனம் செலுத்துவதற்கு ஆணைப்படுத்தப்பட்ட ஒரு முகவர்களுக்கிடையேயான செயலணிக் குழுவை ஸ்தாபித்து, அவசியமான நிவாரணங்களை வழங்குதல். | இந்தக் குறிக்கோளை அடைவதற்கு தேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துதல். | தேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டத்தில் [தே.ம.உ.ந.தி-( NHRAP )] உள்ளடக்கியவாறு. | தே.ம.உ.ந.தி அமுல்படுத்துதல் கண்காணிக்கப்படுகின்றது. | நடைபெற்று வருகின்றது |
| **9.104** – மீளக் குடியமர்ந்த உள்ளக இடம்பெயர்ந்த மக்களுக்கு காணிகளுக்கான சட்ட உரித்துடைமையை வழங்குதல். | உரித்துடைமையை வழங்கும் சுற்றறிக்கையின் அமுல்படுத்துதலைத் தொடருதல். | காணிகள் அமைச்சு | சுற்றறிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது. | நடைபெற்று வருகின்றது. |
| **9.106** – உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் [மக்கள் மீளக்குடியமர்வதற்கு இருக்கின்ற இடங்கள் தொடர்பாக] | காணிகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 22.07.2011 திகதிச் சுற்றறிக்கை இல. | காணிகள் அமைச்சு | விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. | 6 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| கொள்கைகள் மற்றும் அவர்களுக்குள்ள தெரிவுகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல். | 2011/4 இன் அமுல்படுத்துதுல் மீது சம்பந்தப்பட்ட குழுக்களுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். | | | |
| **9.108 -**இடம்பெயர்ந்து இந்தியாவில் வாழும் ஆட்கள் இலங்கைக்கு மீள்திரும்புவது தொடர்பில் கவனத்துடனான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயலும் வகையில் இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையில் முறைசார் இருதரப்பு கலந்தாலோசித்தல் செயன்முறையை முன்னெடுத்தல். | 1. இந்தியாவில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான கொள்கையை உருவாக்குதல்;<br>2. கொள்கையின் நியதிகளின் அடிப்படையில் இரு தரப்புக் கலந்தாலோசனைகளை நடாத்துதல். | 1. காணிகள் அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு<br>2. வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு | இரு தரப்புக் கலந்தாலோசனைகள் நடைபெற்று தீர்மானங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளன. | 24 மாதங்கள் |
| **9.113 -** இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் புகலிடம் வழங்கிய சமூகங்கள் என்பவற்றுடனான விரிவான கலந் தாலோசனையின் பின்னர் [வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின்] பிரச்சினை தொடர்பில் நிலையான தீர்வுகளை ஆராய்ந்து ஒரு விரிவான அரச கொள்கையை உருவாக்குவதற்கு ஒரு விசேட குழுவை நியமித்தல். | 1. முஸ்லிம் இடம்பெயர்ந்த மக்கள் பிரச்சினை மீது ஒரு கொள்கையொன்றை உருவாக்குவதற்கு வடக்கு மற்றும் கிழக்குக்கான ஜனாதிபதி செயலணிக்குழு.<br>2. கொள்கைளை அமுல்படுத்துவதற்கு அவசியமான நெறிப்படுத்தல்களை வெளியிடுதல். | வடக்கு மற்றும் கிழக்குக்கான ஜனாதிபதி செயலணிக்குழு. | 1. கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது<br>2. கொள்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது | 9 மாதங்கள் |
| **9.115அ-இ** ஊடகவியலாளர்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான தொல்லைப் படுத்தல்கள் மற்றும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு அனைத்து விதமான நடவடிக்கைகளை எடுத்தல்.<br><br>அத்தகைய சம்பவங்களின் புலன்விசாரணை, வழக்குத் தொடருதல் மற்றும் முடிவுறுத்துதல் என்பவற்றுக்கு முன்னுரிமை அளித்தல். கடந்த காலத்திலான அத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளை முறையாக புலன்விசாரணை செய்தல். | 1. ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.<br><br>(அ குறைதீர்க்கும் பொறிமுறைகளைக் கைக்காள்ளுதல்-<br>பொலிஸிற்கு முறைப்பாடு செய்தல், உயர் நீமிமன்றத்திற்கு அடிப்படை உரிமை விண்ணப்பங்கள், பத்திரிகைச் சபைக்கு முறைப்பாடு செய்தல் (பரந்தபட்டவொரு நியாயாதிக்கம் | 1. மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு | 1. ஊடகவியலாளர்களின் குறைகளுக்கு பயனுறுதியான பரிகாரம். | 12 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் அதிகரித்த அதிகாரம் என்பவற்றுடன்)<br><br>(ஆ) பொலிஸின் செயற்பாடின்மை குறித்து தேசிய பத்திரிகைகள் சபைக்கு முறைப்பாடுகள் செய்தல்.<br><br>2. தற்போதைய வழக்குகளில் புலன்விசாரணைகளைப் பூர்த்தி செய்தல்.<br><br>3. பொறுப்புள்ள ஊடகத்துறையை முன்னேற்றுதல் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு ஓர் ஒழுக்கக் கோவையை கவனத்தில் கொள்ளுதல். | 2. பொலிஸ் திணைக்களம்<br><br>3. பத்திரிகைச் சபை | 2. புலன்விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட:டுள்ளது. | |
| **9.115ஈ** - வடக்கு மற்ம் கிழக்கில் ஊடகவியலாளர்களின் சுதந்திரமான நடமாட்டத்தை உறுதிப்படுத்துதல். | 1. வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகவியலாளர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு, ஏதேனும் இடையூறுகளிருப்பின், அவற்றை இனங்காணுதல்.<br><br>2. ஏதேனும், இடையூறுகளிருப்பின் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு<br><br>பொலிஸ் திணைக்களம் | 1. ஏதேனும் இடையூறுகளிருப்பின், இனங்காணப்பட்டது.<br><br>2. அனைத்து இடையூறுகளும், ஏதேனும் இருந்திருப்பின், அவை அகற்றப்பட்டுள்ளன. | 6 மாதங்கள் |
| **9.115உ –** தகவல்களுக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டவாக்கத்தை இயற்றுதல். | சட்டவாக்கத்தை வரைவதற்கு பொருத்தமான காலவரைறையை அமைச்சரவை தீர்மானித்தல். | மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு | சட்டவாக்க மன்றத்தினால் அத்தகைய சட்டவாக்கம் ஏற்றுக்கொள்ளப்படுவது தொடர்பில் அமைச்சரவை அமைச்சர்களுடன் அமைச்சரவை அலுவலகம் இடைச்செயற்படும். | TBC |

| | | | | |
|---|---|---|---|---|
| **9.117 –**வணக்க ஸ்தலங்களுக்கு செல்வதற்கு எஞ்சியிருக்கும் ஏதேனும் கட்டுப்பாடுகளை நீக்குதல். | 1.இருக்கின்ற ஏதேனும் கட்டுப்பாடுகளை இனங் காணுதல்.<br><br>2. கட்டுப்பாடுகள் ஏதேனுமிருப்பின் நீக்குதல். | மத விவகாரங்களுக்கான அமைச்சு | கட்டுப்பாடுகள் ஏதேனுமிருப்பின், நீக்கப்பட்டள்ளது. | 12 மாதங்கள் |
| **9.118 –** மக்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோர் கட்டுப்பாடுகளின்றி அமைதியான நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களை ஒழுங்கு படுத்துவதற்கான சுதந்திரத்தை உறுதிப் படுத்துதல். | இந்த சுதந்திரத்தை அனுபவிப்பதில் ஏதேனும் தடைகள் உள்ளனவா என்பதை அறிவதற்கு அரசாங்க அதிபரின் மாதாந்தக் கூட்டங்களைக் கண்காணித்தல்.. | அரச நிர்வாக அமைச்சு | நிகழ்வுகளை ஒழுகங்கேற்பாடு செய்வது தொடர்பில் முறைப்பாடுகளில்லை. | நடைபெற்று வருகின்றது |
| **9.119–** வெளிநாட்டிலிருந்தான விருந்தினர்கள் முறையற்ற ஏதேனும் கட்டுப்பாடுகளின்றி அணிமையில் மீள்குடியேறிய பிரதே சங்களில் உள்ள தங்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் விஜயம் செய்வதற்கு அனுமதித்தல். | விருந்தினர்களுக்கு முறையற்ற கட்டுப்பாடுகள் உள்ளனவா என்பதை இனங் கண்டு, ஏதேனுமிருப்பின், அத்தகைய கட்டுப்பாடுகளை நீக்குதல். | பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ் திணைக்களம், சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர். | ஒரு அறிக்கையின் உருவாக்கம் அத்தகைய கட்டுப்பாடுகள் நடைமுறையில் இல்லையென்பதை உறுதிப்படுத்துகிறது. | 6 மாதங்கள் |
| **9.120 –**கடந்த காலத்து விசாரணை ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல், குறிப்பாக, பின்வரும் இறப்புகளுடன் தொடர்புபட்ட குற்ற மிழைத்தவர்கள் தொடர்பான மேலதிக புலன்விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல்:-<br><br>அ) ஜனவரி 2006இல் திருகோணமலையில் 5 மாணவர்கள்; மற்றும்<br><br>ஆ) ஆகஸ்ட் 2006 இல் அக்ஷன் பாம் ஸ்தாபன 17 தன்னார்வப் பணியாளர்கள். | 1. குழுக்களின் பரிந்துரைகளை ஆராய்தல்<br><br>2. பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு பிற்தொடர்ச்சியான நடவடிக்கைகள் | சட்ட மா அதிபர் திணைக்களம்<br><br>பொலிஸ் திணைக்களம் | பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. | நடைபெற்று வருகின்றது |

## க.பா.ந.ஆ இறுதி அறிக்கை: காணி மீளளிப்பு மற்றும் மீள்குடியேற்றம்

| பரிந்துரை | நடவடிக்கை | பிரதான பொறுப்புடைய அலுவலகம் | முக்கிய நிறைவேற்றுகைக் குறிக்காட்டி (KPI) | கால வரையறை |
|---|---|---|---|---|
| **9.124** பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல்:-<br><br>(1) சட்டங்கள் மற்றும் ஒழுங்கிற்கமைவாக, இலங்கைப் பிரஜைகள் எவரும் நாட்டின் எப்பாகத்திலும் காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமென்பதுடன், அவரது விருப்பப்படி எந்தவொரு கட்டுப்பாடுகளோ அல்லது மட்டுப்படுத்தல்களோ இன்றி குடியிருப்பதற்கும் முடியும்.<br><br>(2) அரசாங்கத்தின் காணிக் கொள்கை, ஓர் மாகாணத்தின் குடிசனப் பரம்பல் மாதரிரியில் செயற்கையான மாற்றங்களை ஏற்படுத்து வதற்கான ஒரு கருவியல்ல.<br><br>(3) அரச காணிகளின் பகிர்ந்தளித்தல் அரசியலமைப்பில் ஏற்பாடளிக்கப்பட்டவாறு தொடர்கிறது. | 1. (அ) காணியைப் பெற்றுக் கொள்வதற்கான சட்ட உரிமைகளை மீறும் நடைமுறைகள் உள்ளனவா என உறுதிப்படுத்துவதற்கு ஆய்வை நடாத்துதல்.<br><br>(ஆ) ஏதேனும் மீறுதல்கள் இருப்பின், அவற்றை நீக்குவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.<br><br>(இ) குடியேற்றத்துக்கு கிடைக்கக்கூடிய பொருத்தமான அரச காணிகளை இனங் காணும் ஒரு நோக்குடன் காணிப் பாவனை மீதான கொள்கையின் பயனுறுதியான அமுல்படுத்துதல்.<br><br>2. பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவதற்கான கொள்கையைப் பரிந்துரைப்பதற்கு, முன்னைய மூன்றையும் ஒத்த (அதாவது:1927, 1936 மற்றும் 1985 ஆண்டுகளின் காணி ஆணைக்குழுக்கள்) ஒரு விசாரணை நியதிகளுடன், 4ஆவது | 1. காணிகள் அமைச்சு<br><br>2. வடக்கு மற்றும் கிழக்குக்கான ஜனாதிபதி செயலணிக்குழு. | 1. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குக்கான குறிப்பிடுதல்களுடன் அரச காணிகளின் பராதீனப்படுத்துதல் தொடர்பான பூர்த்தி செய்யப்பட்டதொரு ஆய்வு.<br><br>2. 4ஆவது காணி ஆணைக்குழுவின் நியமனம். | 12 மாதங்கள்<br><br>24 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணி ஆணைக்குழுவொன்றை நியமித்தல்.<br><br>3. நியதிச் சட்டங்களின் பயனறுதியான அமுல்படுத்துதலை உறுதிப்படுத்துதல், அதாவது அரச காணிகள் கட்டளைச் சட்டம், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம், காணி அன்பளிப்புகள்(விசேட ஏற்பாடுகள்) சட்டம். | 3. ஜனாதிபதி செயலகம் | | |
| எந்தவொரு அரசாங்க முகவரமைப்புகளாலும் தனியார் காணிகள் குடியேற்றங்களுக்கு உபயோகிக்கப்படமாட்டாது என்பதற்கு அரசாங்கத்தால் ஒரு தெளிவான அறிக்கையை விடுத்தல். | குடியேற்றங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதற்கு ஒரு கொள்கையை உருவாக்குதல். | காணிகள் அமைச்சு | கொள்கை உருவாக்கப்பட்டது | 12 மாதங்கள் |
| ***ஜூலை 2011 இல் பிரேரிக்கப்பட்ட காணிக் கொள்கை மற்றும் இணைந்ததான நிகழ்ச்சித்திட்டம் என்பன பயனுறுதியான வகையில் அமுல்படுத்தப்படுவதை உறுதிப் படுத்தும் முகமாக க.பா.ந.ஆ பின்வரும் பரிந்துரைகளை அளிக்கின்றது:***<br><br>**9.126 –** மீள்திரும்புகின்ற அனைத்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் இயலுமான விரைவில் காணிகளைக் கிடைக்கும்படி செய்வதற்கு திட்டம் நாடுகிறது என்பதையும், அது, கேள்விக்குட்பட்ட காணிக்கான அவர்களது கோரிக்கைக்கு செல்லுபடியாகும் தன்மை கொண்ட சட்டச் சான்றைக் கொண்டுள்ள மக்களுக்கு சட்ட நீதி மன்றங்களிலான உதவி நாடுதல்களுக்கான ஒரு மாற்றீடு அல்ல என்பதையும் விளம்பரப்படுத்துகின்ற ஒரு முயற்சி மூலம் மக்களுக்கு உறுதி செய்தல். | உத்தேசிக்கப்பட்ட 4ஆவது ஆணைக் குழு பரிந்துரைகள் 9.126, 9.128, 9.129, 9.131 மற்றும் 9.136 என்பவற்றை அறிந்து கொள்வதோடு அத்தகைய பரிந்துரைகளின் அமுல் படுத்துதலின் சாத்தியக்கூற்றினையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். | காணிகள் அமைச்சு | 4ஆவது ஆணைக்குழுவின் கண்டறிதல்களுடன் இணங்கியதாக நடவடிக்கைகளை அமுல்படுத்துதல். | 24 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| **9.128 –** தேவையான மனித மற்றும் நிதி வளங்களை வழங்குதல்.<br><br>**9.129 -** சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்களினால் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுடன் பணியொதுக்கப்பட்ட சிவில் நிர்வாக உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்தல் மற்றும் காணி ஆணையாளர் நாயகத்தால் தேசிய மட்டத்தில் அமுல்படுத்துதலின் தரத்தைக் கண்காணித்தல்.<br><br>**9.131 –** நிகழ்ச்சித்திட்டத்தின் சரியானதும் மற்றும் தெளிவானதுமான ஒரு பார்வையை ஊடகங்கள் உருவாக்குவதற்கு ஏதுவாக நன்கு திட்டமிட்ட ஒரு ஊடகக் கருத்தரங்கை ஒழுங்கேற்பாடு செய்தல்.<br><br>**9.132 –** பல்வேறு குழுக்களுக்காக தெரிவு செய்யப்பட்ட அனைத்து உத்தியோகத் தர்கள் மற்றும் சமூகத் தலைவர்களுக்கு நன்கு வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்.<br><br>**9.133 –** நிகழ்ச்சித் திட்டதிலிருந்து நன்மைகளை இடம்பெயர்ந்த மக்கள் பெற்றுக்கொள்ள முன்வருவதற்கு உதவும் முகமாக எளிமையான தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு தொடர்பாடல் பிரச்சாரத்தை ஆரம்பித்தல்.<br><br>**9.134 –** பாதுகாப்புக் காரணங்களுக்காக உபயோகிக்கப்பட்டு வருகின்ற காணிகளின் அதிகபட்ச அளவுகளை விரைவாக விடுவிப்பதற்கு பாதுகாப்புப் படை | -மேலுள்ளவாறு- | -மேலுள்ளவாறு- | | |

| | | | | |
|---|---|---|---|---|
| அதிகாரிகளின் பங்களிப்பை ஈடுபடுத்துதல்.<br><br>**9.135, 136 –** குழுவின் முதலாவது விசாரணைச் செயன்முறை ஆரம்பிக்கப் படுவதற்கு முன்பதாக ஒவ்வொரு மாவட்ட செயலகப் பகுதிகளிலும் நன்கு விளம்பரப் படுத்தப்பட்ட 'சமூகக் கலந்தாலோசித்தல் கூட்டத்தை' ஒழுங்கு செய்து நடாத்துதல். இந்தச் செயன்முறை மூலமாக மேற் கொள்ளப்படுகின்ற ஆக்க பூர்வமான யோசனைகளை விரைவாகக் கவனத்தில் கொள்வதற்கு ஒரு பொறிமுறையை ஸ்தாபித்தல். | | | -மேலுள்ளவாறு- | -மேலுள்ளவாறு- |
| **9.140 –** உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படும் வரை உள்ளக இடம் பெயர்ந்த மக்களைத் தவிர ஏனைய வர்களுக்கு அரச காணிகளின் ஏதேனும் பராதீனப்படுத்தலைத் தவிர்ப்பதற்கு கடுமையான கட்டுப்பாடுகளைப் பிர யோகித்தல். | இந்தக் கொள்கையை உள்ளடக்குகின்ற காணிகள் அமைச்சின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் அமுல்படுத்துதலை உறுதிப்படுத்தல். | காணிகள் அமைச்சு | சுற்றறிக்கையின் அமுல்படுத்துதல் | 3 மாதங்கள் |
| **9.141 –** நிகழ்ச்சித் திட்டக் கொள்கை, தீர்மானம் மேற்கொள்ளுதல், மற்றும் அமுல் படுத்துதல் என்பவற்றுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பானதாக இருக்கும் எனும் புரிந்து கொள்ளுதலின் அடிப் படையில், நிகழ்ச்சிததிட்டத்தின் உதவிக்கு அபிவிருத்திப் பங்காளி ஒருவரின் ஒத்துழைப்பை ஆர்வத்துடன் நாடுதல். | 1. வெளிவாரிப் பங்காளி ஒருவரின் தேவையை மதிப்பீடு செய்தல்.<br>2. வெளிவாரி வளங்கள் தேவையானதாகக் காணப்படுமிடத்து ஒரு செயல்திட்டப் பிரேரனையை உருவாக்குதல்.<br>3. சாத்தியமாயின், பொருத்தமான வாறு உதவிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுதல். | காணிகள் அமைச்சு<br><br>மீள்குடியேற்ற அமைச்சு<br><br>தேசிய திட்டமிடல் திணைக்களம் | நடவடிக்கைகள் 1,2 & 3 என்பவற்றைக் கையாள்கின்ற ஒரு அறிக்கை. | 3 மாதங்கள் |
| **9.142 –** தேசிய பாதுகாப்புத் தேவைகளின் கண்ணோட்டத்தை கவனத்தில் கொள்ளும் அதே வேளை, கூடுதலான காணிகளை விடுவிக்கும் நோக்கில், பலாலி மற்றும் | மீள்பரிசீலனையின் பின்னானவை ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன - | | அ) காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. | அ) நடைபெற்று வருகின்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| திருகோணமலை-சம்பூரில் தற்போதுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள், அதே போன்று தற்போது பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுவரும் சிறிய அளவிலான தனியார் காணிகள் என்பவற்றை மீள்பரிசீலித்தல். மாற்றுக் காணிகளுக்கான ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அல்லது ஒரு குறித்த கால வரையறைக்கு இழப்பீட்டைக் கொடுப்பனவு செய்தல். | அ) சாத்தியமானவிடத்து காணிகளை விடுவித்தல்;<br>ஆ) பிரயோகிக்கத்தக்க நியதிச் சட்டங்களின் (காணிக் கையேற்றல் சட்டம்) கீழ் மாற்றிடத்தில் அமைப்பதற்கு அல்லது இழப்பீட்டை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல். | (அ) பாதுகாப்பு அமைச்சு<br>(ஆ) காணிகள் அமைச்சு | ஆ) மாற்றிடம் அமைத்தல் பூர்த்தி செய்யப்பட்டது.<br>இ) இழப்பீடு கொடுக்கப்பட்டது | ஆ) 6 மாதங்கள்<br>இ) 3 வருடங்கள் |
| **9.150 –** 13ஆவது திருத்தத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பொருத்தமான எதிர்கால தேசிய காணிக் கொள்கை வழிகாட்டல்களை பிரேரிக்கும் முகமாக ஒரு தேசிய காணிகள் ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல். | பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியதிகளின்படி தேசிய காணிகள் ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான பிரேரனையை உள்ளடக்குதல். | 1. ஜனாதிபதி செயலகம்<br>2. காணிகள் அமைச்சு | அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியதிகளில் பிரேரனை உள்ளடக்கப்பட்டது. | உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| **9.151 –** தற்போதையதும் மற்றும் எதிர்காலச் சந்ததிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் சுற்றுச்சூழல் மற்றும் உயிரியல் பரம்பல்களின் பன்மைத்துவம், நிலையான பொருளாதார அபிவிருத்தி, ஓய்வு மற்றும் பொழுதுபோக்குத் தரநியமங்கள், மத, கலாச்சார மற்றும் தொல்லியல் இடங்கள் என்பவற்றைப் பாதுகாக்கும் முகமாக *காணிப் பாதுகாப்பு மற்றும் பராதீனப்படுத்துதலில்* மாவட்ட நிர்வாகங்களை வழிகாட்டுவதற்கு சம்பந்தப்பட்ட பல்துறை சார்ந்த மாகாண மற்றும் தேசிய நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் வடக்கு மற்றும் கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்துக்குமாக காணிப் பயன்பாட்டுக்கான ஒரு திட்டத்தை உருவாக்குதல். | 1. வடக்கு மற்றும் கிழக்குக்கான காணிப் பயன்பாட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்கு காணிகள் அமைச்சுக்கு வளங்களை வழங்குதல்.<br>2. 2007 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட காணிப் பாவனைக் கொள்கையின் கீழ் செயற்பட்டு, வடக்கு மற்றும் கிழக்குக்கான காணிப் பாவனைத் திட்டத்தை உருவாக்குதல். | 1.நிதி அமைச்சு மற்றும் அரச நிர்வாக அமைச்சு.<br>2. காணிகள் அமைச்சு | 1. (அ) வரவுசெலவுத் திட்ட ஏற்பாடளித்தல்கள காணிகள் அமைச்சுக்கு கிடைக்கும் வகை செய்தல்;<br>(ஆ)காணிகள் அமைச்சுக்கு ஊழியர்களை வழங்குதல்;<br>2. வடக்கு மற்றும் கிழக்குக்கு காணிப் பாவனைத் திட்டம் உருவாக்கப்பட்டது. | 36 மாதங்கள் |
| **9.152 –** காணிகளின் மீளளிப்பு ஒரு தேசிய | அரச சேவைகள் | ஜனாதிபதி செயலகம் | பரிந்துரைகள் அரச | நடைபெற்று |

| | | | | |
|---|---|---|---|---|
| பிரச்சினை என்பதையும் மற்றும் குறுகிய அரசியல் இலாபங்களைப் பெறுவதற்கான ஒரு கருவியாக அது அரசியல் கட்சிகளால் உபயோகிக்கப்படலாகாது என்பதில் இரு தரப்பு புரிந்துணர்வொன்றுக்கு வருதல். | ஆணைக்குழுவுக்கான பரிந்துரைகளைப் பார்க்கவும். | | சேவைகள் ஆணைக்குழுவுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளன. | வருகின்றது |

## க.பா.ந.ஆ அறிக்கை: மீளளிப்பு/இழப்பீட்டு நிவாரணங்கள்

| பரிந்துரை | நடவடிக்கை | பிரதான பொறுப்புடைய அலுவலகம் | முக்கிய நிறைவேற்றுகைக் குறிக்காட்டி (KPI) | கால வரையறை |
|---|---|---|---|---|
| **9.155** –மோதலுக்குப் பிந்திய தேவைப்பாடுகளைப் [இழப்பீட்டு நிவாரணங்களுக்கான] பொறுப்பேற்பதில் அதன் வகிபாகம் மற்றும் வளங்களை சீர்படுத்தி அதிகப்படுத்தும் ஒரு நோக்கில் ஆட்கள், சொத்துக்கள் மற்றும் கைத்தொழில் புனருத்தாரண அதிகார சபையின் (REPPIA) வகிபாகம் மற்றும் செயற்றிறனை மீள்பரிசீலித்தல்.<br><br>தேங்கிக் கிடக்கும் விடயங்களை முடிவுறுத்தி அகற்றுவதற்கும் அதே போன்று எதிர்காலத்தில் தாமதங்கள் மற்றும் கொடுப்பனவின்மைக்கான காரணமாக நிதியின்மையைத் தவிர்க்கும் முகமாக நிதியைப் பெற்றுக் கொள்ளுதல். கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு கால எல்லையை ஏற்படுத்திக் கொள்ளுதல். | 1. ஆட்கள், சொத்துக்கள் மற்றும் கைத்தொழில் புனருத்தாரண அதிகார சபையின் (REPPIA) பயனுறுதியான அமுல்படுத்தலைப் பாதிக்கும் விடயங்களை ஆராய்தல்.<br><br>2. இனங் காணப்பட்ட பிரச்சினைகளைக் கையாள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.<br><br>3. பாதிக்கப்பட்டவர்களின் ஏற்றுக் கொள்ளத்தக்க முறையிலான இனங் காணும் ஒரு செயன்முறையின் அடிப்படையிலான இழப்பீட்டுக் கொடுப்பனவுக்கு நிதி வழங்குதல். | 1. புனர்வாழ்வு மற்றும் சிறைகள் சீர்திருத்த அமைச்சு<br><br>2. – மேலுள்ளது –<br><br>3. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு | 1. 'ரேப்பியா' (REPIA) மீதான அறிக்கை கிடைக்கப் பெற்றது.<br><br>2. பொருத்தமானவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.<br><br>3. பிரச்சினைகள் தீர்க்கப்பட்டது. | நடைபெற்று வருகின்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| **9.162 –** அரச சார்பற்ற ஸ்தாபன உதவித் திட்டங்களிலிருந்து அரசாங்க உத்தியோகத்தர்கள் தகுதிபெறாதிருப்பது தொடர்பிலான பிரச்சினையை மீள ஆராய்தல். | 1. என்ன தகுதியின்மைகள் இருக்கின்றன என்பதை இனங் காண்பதற்கு அரசாங்கக் கொள்கையை ஆராய்தல்;<br><br>2. ஒப்புரவான உதவியை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அறிமுகப்படுத்துதல். | அரச நிர்வாக அமைச்சு | 1. கொள்கை ஆராயப்பட்டு, பிரச்சினைக்குரிய பகுதிகள் ஏதேனுமிருப்பின், இனங்காணப்பட்டன.<br>2. அவசியமாயின், புதிய கொள்கை தீர்மானிக்கப்பட்டது. | 3 மாதங்கள் |
| **9.164 –** த.வி.பு உடன் சம்பந்தப்பட்டவர்களின் இறப்பு அல்லது காயமடைந்தமைக்கான இழப்பீட்டு நிவாரணங்களை அளிப்பதில் ஒரு தீர்மானத்தை எடுத்தல். | முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு, மீளொருங்கிணைத்தல் மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கான நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்கான அரசாங்க திட்டங்களைத் தொடர்தல். | மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் வடக்கு மற்றும் கிழக்குக்கான ஜனாதிபதி செயலணிக் குழு. | மோதலின் ஒரு நேரடி விளைவான இறப்பு அல்லது காயத்தினால் பாதிக்கப்பட்ட நெருங்கிய உறவினர்களுக்கு நிவாரணங்களை அளிக்கும் நிவாரண நிழ்ச்சித்திட்டங்களின் பயனுறுதியான அமுல்படுத்துதல். | 24 மாதங்கள் |

## க.பா.ந.ஆ இறுதி அறிக்கை: நல்லிணக்கம்

| பரிந்துரை | நடவடிக்கை | பிரதான பொறுப்புடைய அலுவலகம் | முக்கிய நிறைவேற்றுகைக் குறிக்காட்டி (KPI) | கால வரையறை |
|---|---|---|---|---|
| **9.171, 9.227 –** சிவில் நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படைகளின் ஈடுபடுதலையும் மற்றும் பாதுகாப்புப் படைகளால் தனியார் காணிகளின் பயன்பாட்டை ஒரு நியாயமான காலவரையறை அளிக்கப் பட்டு படிப்படியாகக் குறைத்துக் கொள்ளுதல். | 1. சிவிலியன் வேலைகளில் பாதுகாப்புப் படைகளின் ஈடுபடுதலை மேலும் குறைப்பதற்கான திட்டத்தை உருவாக்குதல். நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டங்களின் அனுபவங்கள் தொடர்பாக (95% ஏற்கனவே சிவிலியன் பணிகளிலிருந்து மீளப்பெறப்பட்டுள்ளன) | பாதுகாப்பு அமைச்சு | சிவில் நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு படையணியினர் ஒரு குறிப்பிடத்தக்களவு மீளப்பெறப்பட்டுள்ளனர். | 6 மாதங்கள் |
| **9.195, 195 –** வட மாகாணத்தில் தங்கள் சொந்த இடங்களிற்கு இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் மீளத்திரும்புவதற்கு வசதி ஏற்படுத்துதல். த.வி.பு ஆல் அழிக்கப்பட்ட அல்லது சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்கள், வீடுகள் மற்றும் பாடசாலைகளை மீளக்கட்டுவதற்கு உடனடியான நடவடிக்கை களை எடுத்தல். | இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் மற்றும் மீளொருங்கிணைதலுக்கான கொள்கையை உருவாக்கி, அமுல்படுத்துதல். | வடக்கு மற்றும் கிழக்குக்கான ஜனாதிபதி செயலணிக்குழு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு | அமுல்படுத்தலுக்கான பரிந்துரைகளுடனான தேவைப்பாடுகளை இனங்காணும் அறிக்கையின் பிரசுரித்தல். | 18 மாதங்கள் |
| **5.** பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளில் கூடுதலான பங்குபற்றுதலை உறுதிப்படுத்துவதற்கு ஏ 9 வீதியினூடாக ஆட்களின் சுதந்திரமான நடமாட்டத்தை ஊக்குவித்தல். | ஏ 9 இனூடான சுதந்திரமான நடமாட்டத்துக்கு இடையூறு செய்யும் தேவையற்ற தடைகள் ஏதேனுமிருப்பின், அவற்றை இனங்கண்டு நீக்குதல். | பாதுகாப்பு அமைச்சு | அநாவசியமான தடைகள், ஏதேனுமிருப்பின், நீக்கப்பட்டன. | 02 மாதங்கள் |
| **6.**சிவிலியன் நிர்வாகத்தை சகஜநிலைக்கு கொண்டு வருவதில் அரசாங்க அதிபர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கிடையில் கூடுதலான ஒருங்கிணைதலைப் பேணுதல். | 1. சகஜமான சிவில் நிர்வாகத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் தடைகள் ஏதேனுமிருப்பின், அவற்றை இனங் காணுதல். | அரச நிர்வாக மற்றும் உள்விவகார அமைச்சு | 1) தடைகள் ஏதேனுமிருப்பின், இனங் காணப்பட்டன.<br><br>2) தடைகள் ஏதேனுமிருப்பின், | 12 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2. தடைகளை நீக்குதல்.<br><br>3. அரச நிர்வாக அமைச்சினால் நடாத்தப்படும் அரசாங்க அதிபர்களின் மாதாந்தக் கூட்டத்தில் முன்னேற்றங்களை மீள்பரிசீலித்தல். | | அவை அனைத்தும் நீக்கப்பட்டு வழமையான சிவில் நிர்வாகம் ஸ்தாபிக்கப்பட்டது. | |
| **9.201 –** மோதலுக்குப் பிந்திய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் மற்றும் நல்லிணக்கத்துக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் இந்திய வமசாவளித் தமிழர்களின் அத்தியாவசிய தேவை களையும் கவனத்தில் கொள்வதை உறுதிப்படுத்துதல். பெருந்தோட்டப் பிரதேசங்களில் சுகாதார மற்றும் கல்வி வசதிகளை மேம்படுத்துவதுடன் சிறந்த வாழ்க்கை நிலைமைகளை வழங்குதல். | 1. முன்னேற்றம் தேவையான பகுதிகளை இனங் காண்பதற்கு, பெருந்தோட்டத் துறைக்கு சுகாதாரம், கல்வி மற்றும் வீட்டுவசதிகளை மேம்படுத்துவதற்கு தற்போதுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.<br><br>2. இடையீடுகள் மேலும் பயனறுதியானதாக அமைவதற்கு நிகழ்ச்சித்திட்டங்களை மறுசீரமைத்தல். | சுகாதார அமைச்சு<br><br>கல்வி அமைச்சு<br><br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br><br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு | இருகின்ற நிகழ்ச்சித்திட்டங்களில் வங்கிகளின் பயனுறுதித் தன்மையைச் சுட்டிக்காட்டும் அறிக்கையின் பிரசுரித்தல். | 6 மாதங்கள் |
| **9.204 –** சட்ட விரோத ஆயுதங்களைக் கைவசம் வைத்திருக்கும் நபர்களை நிராயுதபாணியாக்குவதற்கு உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அத்தகைய தவறிழைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கையை எடுத்தல். | தாக்குதல் ஆயுதங்கள் சட்டம்/சுடுகலங்கள் மற்றும் வெடிப்பொருட்கள் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் கடுமையான அமுல்படுத்துதலை உறுதிசெய்தல் மற்றும் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக வெற்றிகரமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். . | பொலிஸ் திணைக்களம் | சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருக்கும் நபர்களை முழுமையாக நிராயுதபாணியாக்குதல். | 6 மாதங்கள் |
| **9.212 –** குற்றவியல் புலன்விசாரணைகள், வழக்குத் தொடர்தல் மற்றும் குற்றவியல் நீதி முறைமைகளுடன் தொடர்புபட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக பொலிசாருக்கு வழிகாட்டி, ஆலோசனை அளிப்பதற்கு மாகாணங்களில் சட்ட மா அதிபர் திணைக் களத்தின் பிரிவுகளை ஏற்படுத்துதல். | 1. சட்ட மா அதிபர் திணைக்களத்திலுள்ள பிரிவுகளுக்கான விசாரணை நியதிகளை உருவாக்கி அவற்றை ஸ்தாபித்தல்.<br><br>2. பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டங்களுக்கான சம்பந்தப்பட்ட அலகுகளில் உள்ளடக்குதல். | 1. சட்ட மா அதிபர் திணைக்களம்<br><br>2. பொலிஸ் | 1.சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரிவுகளின் செயற்றிறனை அதிகரித்தல்.<br><br>2. புலன்விசாரணைகளின் தரங்களை | 12 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 3. பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பயிற்றுநனர்களின் செயற்றிறனை மேம்படுத்துதல். | திணைக்களம்<br><br>3. பொலிஸ் திணைக்களம் | மேம்படுத்துதல்<br><br>3. குற்றவியல் நீதி முறைமையின் வழக்குத் தொடர்தல் மற்றும் பொதுவான மேம்படுத்தல்களில் கூடுதலான வெற்றி. | |
| **9.213 –** அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் புலன்விசாரிக்கப்பட்டு மற்றும் தவறு இழைத்தவர்கள் மீது அவர்களது அரசியல் தொடர்புகளைக் கவனத்தில் கொள்ளாது வழக்குத் தொடரப்பட்டு தண்டனை அளிக்கப்படுவதை உறுதி செய்தல்.<br><br>(9.206-209 பாரதி, கருணா, ஈபிடிபியின் பணம் பறித்தல், மற்றும் மேஜர் சீலன் என்றழைக்கப்படும் ஒரு நபரால் வழி நடாத்தப்படும் ஒரு குழு தொடர்பான புலன் விசாரிக்கப்படாத குற்றச் சாட்டுக்களின் உதாரணங்களை உள்ளடக்குகின்றது.) | புலன்விசாரணைகளை விரைவாக நடாத்தி மற்றும் அரசியலமைப்புக்கான முறையான மதிப்பையும் கொண்டு சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதை உறுதிசெய்தல். சட்டத்தின் சமனான பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துதல். | 1. பொலிஸ் திணைக்களம்<br><br>2. சட்ட மா அதிபர் திணைக்களம்<br><br>3. நீதி அமைச்சு | வெற்றிகரமான வழக்குத் தொடர்தல்களின் ஒரு அதிகரித்த வீதம். | 6 மாதங்கள் |
| **9.214, 215 –** ஆயுத சேவைகளை வழங்கும் நிறுவனங்கைளைக் கையாள்வதிலிருந்து பொலிஸ் திணைக்களத்தை தொடர்பற்றதாக ஆக்குதல்.<br><br>பொலிஸ் சேவையின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு ஒரு சுயாதீனமான நிரந்தரமான பொலிஸ் ஆணைக்குழுவை ஸ்தாபித்தல் மற்றும் அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களும் சுயாதீனமான வகையில் செயற் படுவதையும் மற்றும் ஒரு உயர்ந்த | அது முழுமையாக ஒரு கொள்கை/அரசியல் பிரச்சினையைக் கையாள்வதால் இந்தப் பரிந்துரையை அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு பாரப்படுத்தவும்.<br><br>[சுயாதீனமான பொலிஸ் ஆணைக்குழு ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது] | உத்தேசிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு | பொருத்தமில்லை | பொருத்தமில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| தரத்திலான தொழிலசார் நடத்தையைப் பேணுவதையும் உறுதி செய்தல். | | | | |
| **9.218, 219 –** அரச அதிகாரிகள் மற்றும் நாட்டின் ஆட்சியுடன் சம்பந்தப்பட்ட ஏனைய தனிப்பட்டவர்கள் ஆகியோர் களின் அதிகார துஷ்பிரயோகங்களில் இருந்து தோன்றுகின்ற அநீதி குறித்து அனைத்துப் பிரஜைகளினதும், குறிப்பாக சிறுபான்மையினரின் மனக்குறைகள் மீது கவனம் செலுத்துவதற்கு சுயாதீனமான ஒரு வலுவான புலன் விசாரணைப் பிரிவை ஸ்தாபித்தல். ஏதேனும் நிர்வாக நிறைவேற்று நடவடிக்கைகளில் இருந்து, குறிப்பாக இனம் அல்லது மதம் என்பவற்றின் அடிப்படையில் எழுகின்ற ஒரு மனக் குறையைக் கொண்டுள்ள இந்த நாட்டின் எந்தவொரு பிரஜையும், சுயாதீனமான அமைப்பின் முன் பரிகாரத்தைத் தேடுவதற்கான உரிமையைக் கொண் டிருத்தல் வேண்டுமென்பதை உறுதிப் படுத்துதல். | 1. பிரஜைகளின் உரிமையை வலுப்படுத்துவதற்கு தேவையான மேலதிக மற்றும் கூடுதல் பயனுறுதி கொண்ட முறைமைகளை இனங் காண்பதற்கு இருக்கின்ற அமைப்புகளின் ஏற்பாடளித்தல்களை மீள்பரிசீலித்தல்.<br>2. பிரஜைகளின் மனக்குறைகளுக்கான பொறிமுறைகளை வலுப்படுத்துவதற்கு முறைமைகள்/பொறிமுறைகள்/சட்டங்களுக் குத் திருத்தங்களை அறிமுகப்படுத்துதல். | 1. ஜனாதிபதி செயலகம்<br>2. பாதுகாப்பு அமைச்சு<br>3. சட்ட மா அதிபர் திணைக்களம்<br>4. நீதி அமைச்சு | அமைச்சரவை அமைச்சர்களினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 6 மாதங்கள் |
| **9.224 –** அரச சேவையின் வேலை ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்களினூடாக உளப் பாங்கிலான மாற்றங்களைக் கொண்டு வருவது தொடர்பில் ஒரு குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கி அமுல் படுத்துதல். | தேசிய மனித வளக் கொள்கையை அமுல்படுத்துதல் | மனித வளத் திணைக்களத்துக்கான சிரேஷ்ட அமைச்சரின் அலுவலகம். | 1. மனித வள நடவடிக்கைத் திட்டம் உருவாக்கப்பட்டது.<br>2.மனித வள நடவடிக்கைத் திட்டத்தின் அமுல்படுத்துதுல் ஆரம்பிக்கப்பட்டது. | 3 மாதங்கள் |
| **9.226 –** அரசாங்க சேவையில் அரசியல் தலையீடுகள் இல்லையென்பதையும் மற்றும் அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகள் என்பன அரசியலமைப்பின் சமத்துவ | சுயாதீனமானதொரு அரச சேவைகள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஏற்பாடுகளுடன் ஒத்திணங்குகிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு சுயாதீனமான அரச சேவைகள் ஆணைக்குழுவை ஸ்தாபித்தல். | | | | |
| **9.228 –** சட்டவாக்கத்தின் நீதியியல் மீளாய்வுக்கு ஒரு அரசியலமைப்பு ரீதியான ஏற்பாட்டை ஸ்தாபித்தல். பிரேரிக்கப்பட்ட சட்டவாக்கத்தை விளக்க கோரிக்கைக்கு உட்படுத்துவதற்காக போதுமானதொரு காலவரையறையை வழங்குவதற்கு பொருத்தமான அரசிய லமைப்பு ரீதியிலான திருத்தத்துக்காக ஒரு கருத்தொருமித்தலை எட்டுதல். | அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு பாரப்படுத்துக. | ஜனாதிபதி செயலகம் | பொருத்தமில்லை | பொருத்தமில்லை |
| **9.236, 237 -** அதிகாரப் பகிர்வு மீது கருத்தொற்றுமையை உருவாக்குவதற்கு, அனைத்து அரசியல் கட்சிகளுடனும், குறிப்பாக சிறுபான்மைகளைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்றவற்றுடன் ஒரு தீவிரமான மற்றும் கட்டமைக்கப்பட்ட ஒரு கலந்துரையாடலைக் மேற்கொள்வ தற்கு முன்னெடுப்புகளை எடுத்தல். கலந்துரையாடல் ஒரு உயர் அரசியல் மட்டம் மற்றும் போதுமான துறை சார் தொழில்நுட்ப பின்னணியுடன் நடை பெறுதல் வேண்டும். | அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு பாரப்படுத்துக. | ஜனாதிபதி செயலகம் | பொருத்தமில்லை | பொருத்தமில்லை |
| **9.245 –** 2020ஆம் ஆண்டளவில் ஓர் மும்மொழித் தேசத்திற்கான ஆசிரியர் பயிற்சி மற்றும் ஊழியர்களுக்காக ஒரு முன்னுரிமை அடிப்படையில் கிடைப்பதற்கு வரவுசெலவுத் திட்ட ஏற்பாட்டை மேற்கொள்ளுதல். | 1. மொழிக் கொள்கையின் பயனுறுதியான அமுல்படுத்துதலை உறுதிப்படுத்துவதற்கு ஒரு நடவடிக்கைத் திட்டத்தை உருவாக்குதல்.<br>2. மொழிகள் ஆணைக்குழுவின் வகிபாகத்தை ஆராய்தல் மற்றும் வலுப்படுத்துவதற்கான பகுதிகளை இனங் காணுதல். நடவடிக்கைத் திட்டத்தில், எடுக்க வேண்டிய திருத்த | 1. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு<br>2. மும்மொழிச் சமுதாயம் மீது ஜனாதிபதி | மும்மொழி முன்னெடுப்பு அமுலபடுத்தலின் பயனுறுதியான கண்காணித்தல். | நடைபெற்று வருகின்றது |
| **9.246, 247, 249 –** அனைத்து அரசாங்க அலுவலகங்களும் அனைத்துச் சந்தர்ப் பங்களிலும் தமிழ் பேசும் உத்தி யோகத்தர்களைக் கொண்டிருப்பதைக் கட்டாயமாக்குதல். மொழியின் அடிப் படையில் எந்தவொரு மாவட்டமோ | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| அல்லது மாகாணமோ வகைப்படுத்தப் படல் கூடாது. பொலிஸ் நிலையங்கள் இரு மொழித் திறன் கொண்ட உத்தியோகத்தர்களை 24 மணி நேர அடிப்படையில் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு முறைப்பாட்டாளர் தனது வாக்குமூலத்தை அவர் விரும்பிய பாஷையில் பதிவு செய்யப்படுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். ஓர் தற்காலிக முறைமையாக, நீண்ட காலக் கொள்கைகள் மற்றும் முறைமைகள் பயனுறப்படும் வரை மொழிபெயர்ப்புக்கான கணினி மென் பொருட்கள் பயன்படுத்தப்பட முடியும். | நடைமுறைகளை உள்ளடக்கவும்.<br>3. "2020 ஆண்டளவில் மும்மொழிச் சமுதாயம் மீது ஜனாதிபதி செயலணிக்குழுவின்" பரிந்துரைகளை அமுல்படுத்துதல்.<br>4. அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பயனுறுதியானவையா மற்றும் கொள்கையுடன் இணக்கப்பாட்டைக் கொண்டுள்ளனவா என்பதை மதிப்பீடு செய்வதற்கு ஒரு கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் திட்டத்தை வடிவமைத்தல். | செயலணிக்குழு | | |
| **9.248 –** ஒவ்வொரு மாகாணத்திலும் மற்றும் கிளைகளிலும் ஓர் பயனுறுதியான அதிகாரங்களுடன் கூடிய ஒரு அதிகாரமே மொழிகள் ஆணைக்குழு என்பதை உறுதிப் படுத்துதல். | | | | |
| **9.250 -**மொழி தொடர்பான இடைக்காலப் பரிந்துரையை அமுல்படுத்தவும். பொலிஸ் நிலையங்களில் இருமொழித் திறன் கொண்ட ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தி யோகத்தர்களை உரைபெயர்ப்பாளர் களாக உபயோகிப்பதற்கு கொண் டிருத்தல். | | | | |
| நீண்ட காலத் திட்டங்கள் இடப்படும் வரை தொடர்பாடலில் வசதியளிப்பதற்கு பொருத்தமானவாறு அரச அலுவல கங்களில் உரைபெயர்ப்பாளர்களை உபயோகித்தல். | 1) அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட மொழி உரிமைகள் கடைப்பிடிக்கப் படுவதைக் கண்காணித்தல்.<br>2) மொழி உரிமைகளின் கடைப்பிடித்தலை உறுதிப்படுத்துவதற்கு தேவையான மேலதிக பரிகார முறைமைகளை இனங் | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 1)கண்காணித்தல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டது.<br>2)மேலதிக பரிகார நடவடிக்கைகள் இனங் காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. | 1) 12 மாதங்கள்<br>2) 24 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணுதல். | | | |
| **9.251 –** ஒரு தகுதி அடிப்படையிலான அனுமதி முறைமையை அறிமுகப் படுத்தும் நோக்கில் ஒதுக்கீட்டுப் பங்கீட்டு முறையை (கோட்டா) பரிசீலிப்பதற்கு கல்வியில் நிபுணர்களின் ஒரு குழுவைத் தெரிவு செய்தல். (பல்கலைக் கழகங் களுக்கான அனுமதி?) | அனுமதிக்கான தகைமைகளை மேம்படுத்தும் ஏதேனும் மாற்றங்களை பரிந்துரைக்கும் நோக்கில் தற்போதைய அனுமதிக் கொள்கையை ஆராய்தல். | பல்கலைக் கழக மானியக் குழு/உயர் கல்வி அமைச்சு | நிபுணர்கள் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டது. | 12 மாதங்கள் |
| **9.252 –** நாட்டின் வேறுபட்ட பகுதிகளில் கிடைக்கின்ற கல்வி வசதிகளில் உள்ள சமத்துவமற்ற தன்மையை குறைத்து ஈற்றில் இல்லாதொழித்தல். | நாடு முழுவதிலுமாக பாடசாலைகளிலுள்ள வசதிகளை மேம்படுத்துவதற்கு “மகிந்த சிந்தனை” உடன் இணங்கியதாக தற்போதைய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல். | கல்வி அமைச்சு | பாடசாலைகளிலுள்ள கல்வி வசதிகளை தரமுயர்த்துதல். | 36 மாதங்கள் |
| **9.253, 254 –** வேறுபட்ட இன மற்றும் மதப் பின்னணிகளில் இருந்தான சிறுவர்களுக்கு சேவையாற்றும் கலவன் பாடசாலைகள் மற்றும் மாணவர்களுக்கு மத்தியில் கூடுதலான இடைத் தொடர்புகளை ஊக்குவிப்பதற்கான ஒரு செயற்பாட்டுக் கொள்கையை உருவாக் குதல் [உதாரணம்: பாடசாலைகளை இணைத்தல், மாணவர் பரிமாறல் திட்டங்கள், நல்லிணக்கச் சங்கங்கள், தேசிய இளைஞர் பேரவை பரிமாறல் நிகழ்ச்சித்திட்டங்கள்]. | 1. இனரீதியான கலவன் பாடசாலைகளை ஊக்குவிக்கும் ஒரு கொள்கையை உருவாக்குதல்.<br>2. சமூகங்களுக்கிடையிலான தொடர்புகளை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலைகள் உள்ளடக்கியிருப்பதை உறுதிசெய்தல். | கல்வி அமைச்சு | இனரீதியான கலவன் பாடசாலைகளை ஊக்குவிக்கும் ஒரு கொள்கை ஸ்தாபிக்கப்படல். | 24 மாதங்கள் |
| **9.257 –** அரச பல்கலைக் கழகங்கள் மூன்று மொழிகளிலும் அளிக்கப்படும் கற்கை நெறிகளின் ஒரு தெரிவுடன் இனரீதியாக கலப்புக் கொண்ட மாணவர் தொகைகளைக் கொண்டிருப்பதை | தற்போதைய கொள்கை இந்தத் தேவைப்பாட்டை ஒரு பொருத்தமான வகையில் நிறைவேற்றுகிறது. எவ்வாறாயினும், தற்போதைய முறைமையை கவனத்தில் கொள்வதற்கு ஒரு நிபுணர்கள் | பல்கலைக் கழக மானியக் குழு/உயர் கல்வி அமைச்சு | நிபுணர்கள் குழுவொன்றின் இனங் காணுதல். | 12 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| உறுதி செய்தல். | குழாம் ஒன்றுகூட்டப்படலாம் என்பதுடன் மும்மொழிச் செயன்முறையை முன்னேற்றும் ஏதேனும் மாற்றங்களைப் பரிந்துரைக்கலாம். | | | |
| **9.258 -** மாகாணங்கள் மற்றும் தேசிய மட்டங்களிலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல். | தற்போது, தேசிய மட்டத்திலான போட்டிகள் நாடு முழுவதிலுமான பங்குபற்றுதலை உறுதிப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், முன்னைய மோதல் பிரதேசங்களில் விளையாட்டுக்களை ஊக்கத்துடன் முன்னேற்றுவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட முடியும். | விளையாட்டுத்துறை அமைச்சு | அத்தகைய போட்டிகள் பல வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. | நடைபெற்று வருகின்றது |
| **9.261, 263 –** புலம்பெயர் சமூகத்தின் உபயோகப்படுத்தாதுள்ள ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளைக் கொண்ட ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைப் பிரேரிப்பதற்கு, ஜனாதிபதி செயலகம், வெளிவிவகார, பாதுகாப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தனியார்துறை மற்றும் கல்விமான்களை உள்ளடக்குகின்ற ஒரு பலதுறை சார்ந்த செயலணியை உருவாக்குதல் மற்றும் 'விரோதப்போக்கைக் காண்பிக்கும் புலம் பெயர் குழுக்களின்' கரிசனைகளுக்கு பதிலிறுப்பதற்கும், மற்றும் அவர்களை நல்லிணக்கச் செயன்முறைகளில் ஈடுபடும் அரசாங்கம் மற்றும் அக்கறை கொண்டோர்களுடன் ஆக்க பூர்வமான முறையில் சம்பந்தப்படுத்துதல். | 1. இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்கள் மூலமாக புலம்பெயர் சமூகங்களின் உபயோகப்படுத்தாதுள்ள ஆற்றல்களை பயன்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.<br><br>2. வெளிநாட்டுத் தூதரகங்களூடாக நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல். | வெளி விவகார அமைச்சு | 1. நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப் பட்டது.<br><br>2. நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப் பட்டது. | 3 மாதங்கள்<br><br>3 மாதங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| **9.270 –** நம்பிக்கை இடைக் குழுக்களுடனான கலந்துரையாடலில், இன அல்லது மத ரீதியான பதட்டங்கள் அல்லது பிணக்குகள் மோதல் நிலைகளுக்கு இட்டுச் செல்லாதிருப்பதை உறுதிசெய்வதற்கு ஒரு முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் முன்கூட்டியே தணிக்கும் ஒரு பொறிமுறையின் ஸ்தாபித்தலிற்கு வசதியளிக்கவும். | 1. பொலிஸ் மற்றும் சமூகமயப்படுத்தப்படும் பொலிஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் சிவில் பாதுகாப்பு குழு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்துதலை தொடர்தல்.<br>2. சமூக அபிவிருத்திக் குழுக்களிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களது செயற்றிறன் அபிவிருத்தியைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களின் அமுல்படுத்துதல். | பொலிஸ் திணைக்களம் | அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் அமுல்படுத்துதல் மற்றும் அத்தகைய அமுல்படுத்துதலிற்கு பரந்த விளம்பரப்படுத்துதல். | 6 மாதங்கள் |
| **9.274, 275 –** மொழி மற்றும் கலாச்சார உறவுகளுக்கு கூடுதலான விழிப் புணர்வை உருவாக்குதல். தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலுள்ள முக்கியமான இலக்கிய ஆக்கங்களை முறையே சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்த்து அவற்றை பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடையே பரப்புரை செய்தல்.<br><br>சமூகங்களுக்கிடையலான பொதுத் தன்மைகள், பரஸ்பர புரிந்துணர்தல்களை சுட்டிக்காட்டுகின்ற திரைப்பட, தொலைக்காட்சி மற்றும் மேடை நாடக உருவாக்கங்களை ஊக்குவித்தல். | 1. மொழிபெயர்ப்பு மற்றும் இலக்கிய ஆக்கங்கள் மூலமானவை உட்பட கலாச்சார உறவின் விழிப்புணர்வை உருவாக்குவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான முறைமைகளை ஆராய்ந்து அறிமுகப்படுத்துதல்.<br><br>2. சமூகங்களுக்கிடையே பொதுத்தன்மைகள் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வுகளை சுட்டிக் காட்டுவதற்கு கலாச்சாரப் பிரிவை ஈடுபடுத்தல். | 1. கலாச்சார விவகார அமைச்சு<br><br>2. கலாச்சார விவகார அமைச்சு | சமூகங்களுக்கிடையில் கலாச்சார உறவு மற்றும் பொதுத்தன்மைகள் என்பவற்றை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள். | 12 மாதங்கள் |
| **9.277 -** இரண்டு மொழிகளில் தேசிய கீதம் பாடி வருகின்ற தற்போதைய நடைமுறையைப் பேணுதல். | அரச சேவைகள் ஆணைக்குழுவில், தற்போதைய அரசியலமைப்பு ஏற்பாடுகளில் இந்தப் பரிந்துரையை ஆராய்ந்து அமுல்படுத்துதல். | ஜனாதிபதி செயலகம் | அரச சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுல்படுத்துதல். | 1 வருடம் |
| **9.283 -** இனம், மதம் மற்றும் இலக்கியம் தொடர்பாக *'பகைமை உணர்வுகளை ஏற்படுத்தும் உரைகளைக்'* கையாள் | 1. பகைமை உணர்வுகளை ஏற்படுத்தும் உரைகளைக் கையாள்வதற்கு தண்டனைக் கோவைச் சட்டவாக்கத்தின் போதுமான | நீதி அமைச்சு | பாராளுமன்றத்துக்கு வரைபுச் சட்டவாக்கத்தின் சமர்ப்பித்தல். | 1 வருடம் |

| | | | | |
|---|---|---|---|---|
| வதற்கு அச்சுறுத்தும் வகையிலான சட்டங்களை இயற்றி கடுமையாக அமுல்படுத்துதல். | தன்மையை ஆராய்தல்.<br><br>2. அவசியமாயின், சட்டச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தல். | | | |
| **9.285 –** துன்பமான மோதல்களில் உயிரிழந்த அனைத்துப் பாதிக்கப்பட்ட வர்களுக்குமான ஒருமைப்பாடு மற்றும் பச்சாதாபத்தை தெரிவிக்கும் வகையில் தேசிய தினத்தில் தனியானதொரு நிகழ்வை ஏற்படுத்தியும் மற்றும் நாட்டில் மீண்டும் இத்தகைய இரத்தம் சிந்துதல்கள் ஒருபோதும் ஏற்படாது இருப்பதை உறுதி செய்வதற்கான எங்களது கூட்டுப் பற்றுறுதியையும் உறுதியளித்தல். | ஒருவரையொருவர் அழிக்கின்ற மோதல்களுக்கு இட்டுச் சென்ற கடந்த கால நிகழ்வுகள் மீளவும் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு வன்முறையின்மை மற்றும் சமாதானம் என்பவற்றுக்கான எங்களது ஒரு கூட்டுப் பற்றுறுதியுடன் ஒரே தேசம் மற்றும் ஒரே மக்களாக ஒற்றுமையை வெளிப்படுத்தும் தற்போதைய நடைமுறையைத் தொடருதல். | 1. ஜனாதிபதி செயலகம்<br><br>2. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு<br><br>3. அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | அனைத்து மக்களிடையேயும் நிலையான சமாதானம் மற்றும் ஒற்றுமை | --- |